செ.வெ.எண்: 481

அரசு செய்தி வெளியீடு – 29.7.2007

**

செட்டிநாடு மருத்துவக் கல்லூரியில் இந்த ஆண்டு அரசு ஒதுக்கீடாக 65 சதவிகிதம் மாணவர்களுக்கு இடம் ஒதுக்கிட வேண்டுமென்ற அரசின் ஆணைக்கு எதிராக, அந்தக் கல்லூரி நிர்வாகம் உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்து, 65 சதவிகித மாணவர்களை அரசு ஒதுக்கீடு அடிப்படையில் சேர்க்க இயலாது என்று தெரிவித்திருந்த அடிப்படையில், அரசினால் அந்தக் கல்லூரிக்கு கவுன்சில் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் அங்கே சேர்வதில் தடை ஏற்பட்டிருந்தது. எனினும் அந்தக் கல்லூரி நிர்வாகத்துடன் அரசு நடத்திய பேச்சுவார்த்தைக்குப் பின்னர், அந்தக் கல்லூரி நிர்வாகம் 65 சதவிகித மாணவர்களை அரசு ஒதுக்கீட்டின் அடிப்படையில் இந்த ஆண்டு சேர்த்துக் கொள்ள முன் வந்து அரசுக்கு இன்று கடிதம் கொடுத்துள்ளார்கள். அதன்அடிப்படையில் ஏற்கனவே இந்தக் கல்லூரிக்கென தேர்வு செய்யப்பட்ட மாணவர்கள் அரசிடம் ஏற்கனவே பெற்ற ஆணைகளை அந்தக் கல்லூரியில் கொடுத்து அங்கே சேர்ந்து கொள்ளலாம் என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகின்றது.

***

வெளியீடு: இயக்குநர்
செய்தி மக்கள் தொடர்புத் துறை
சென்னை-9.